## அனைவரும் களத்தில் இறங்கி, முழுமையாகப் பணியாற்றினால்,

# 200-க்கும் அதிகமான தொகுதிகளில் தி.மு.கழகம் வெற்றி பெறும்!

### சென்னையில் நடைபெற்ற திருமண விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!



**சென்னை,ஆக.30-**

**விழுப்புரம் வடக்கு மாவட்டத் துணை அமைப்பாளர் இராம.சரவணன் - மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் செல்வி இராம. சரவணன் ஆகியோரின் மகள் சாய்ஸ்ரீ - ஜீனத் பிரியன் இணையரின் திருமணத்தை கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை - குறிஞ்சி இல்லத்தில் நேற்று முன்தினம் காலை நடத்தி வைத்தார்.**

**அப்போது அவர் மணமக்கள், கலைஞரும் - கழகமும் போல, கழகத்தலைவரும் - உழைப்பும் போல, பல்லாண்டு வாழ்க என வாழ்த்தினார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

விழுப்புரம் வடக்கு மாவட்ட ஐ.டி.விங் துணை அமைப்பாளர் சகோதரர் இராம.சரவணன் அவர்களின் அன்புமகள் சாய்ஸ்ரீ மற்றும் தம்பி ஜீனத்பிரியன் இணையரின் திருமணத்தை, உங்கள் அனைவரின் முன்னிலையில் நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவரின் சார்பாக, எனது திருமண வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அன்பும் உறுதியும்

இந்தத் திருமணத்தை நான்தான் நடத்தி வைக்க வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் செஞ்சி மஸ்தான் அவர்களும், சகோதரர் இராம.சரவணன் அவர்களும், மற்ற கழக நிர்வாகிகளும் என்னை சந்தித்து, இந்த தேதியை என்னிடத்தில் பெற்றார்கள். ``ஆனால், ஏற்கனவே ஒப்புக்கொண்ட பல்வேறு நிகழ்ச்சிகள் இருப்பதால், என்னால் உங்கள் மாவட்டத்துக்கு வர இயலாது. அப்படிப்பட்ட ஒரு சூழல் இல்லை'' என்று நான் எடுத்துக்கூறிய போது, நீங்கள் விழுப்புரம் மாவட்டத்துக்கு வர வேண்டாம். நாங்கள் சென்னைக்கு வருகிறோம். உங்களின் அலுவல் இல்லத்திலேயே இந்தத் திருமணத்தை நடத்தி வைத்துக் கொடுங்கள் என்று அண்ணன் மஸ்தான் அவர்களும், சகோதரர் சரவணன் அவர்களும் உறுதியோடும், அன்போடும், உரிமையோடும் என்னிடத்தில் கேட்டுக் கொண்டார்கள். இதுதான் திராவிட முன்னேற்றக் கழகம்.

### தனிச்சிறப்பு

திராவிட முன்னேற்றக் கழக உடன்பிறப்புகளான நமக்கிடையே இருக்கிற இந்தப் பாசப்பிணைப்பு, வேறு எந்தக் கட்சியிலும், இயக்கத்திலும் உங்களால் பார்க்க முடியாது. அந்த வகையில், பெருமையோடு இந்தத் திருமணத்தை நடத்தி வைத்திருக்கிறேன். இன்றைக்கு இந்தத் திருமணம் சுயமரியாதைத் திருமணமாக சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்தத் திருமணத்தில் இன்னொரு தனிச்சிறப்பு உண்டு. இது காதல் திருமணம் என்று சொன்னபோது, நான் கூடுதல் மகிழ்ச்சி அடைந்தேன். அதுமட்டுமல்ல, இது ஒரு சாதி மறுப்புத் திருமணமாக சிறப்போடும், பெருமையோடும் நடைபெறுவது எனக்கும் உங்களுக்கும் கூடுதல் மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

ஜீனத் பிரியனும் - சாய்ஸ்ரீயும் ஐந்தாண்டுகள் காதலித்து, இன்றைக்கு திருமண வாழ்வில் இணைந்து இருக்கிறார்கள். காதலித்து திருமணம் செய்வது எவ்வளவு சிரமம் என்று உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும். குறிப்பாக நன்றாக எனக்கும் தெரியும். முதலில் ஆணும், பெண்ணும் காதல் பந்தத்தில் ஒன்றாக வேண்டும். ஆணை, பெண் சமாதானப் படுத்த வேண்டும், பெண்ணை ஆண் சமாதானப்படுத்த வேண்டும். ஆணும், பெண்ணும் சேர்ந்து அவர்களின் பெற்றோர்களை ஒப்புக்கொள்ள வைக்க வேண்டும்.

### காதல் திருமணம்

இப்போது அப்பா - அம்மா ஒப்புதல் மட்டும் பத்தாது. சொந்தம், பந்தம் அனைவரின் ஒப்புதலும் வாங்க வேண்டும். அதில் பல பேர் அறிவுரை வழங்குவார்கள். நம் குடும்பத்துக்கு, காதல் திருமணம் எல்லாம் செட் ஆகாது. பையன் என்ன படித்திருக்கான், பொண்ணு என்ன படித்திருக்கிறது தெரியாது என்று இப்படி பல பேர் குறுக்கே இருப்பார்கள். அவர்களையெல்லாம் கடந்து, பல்வேறு தடைகளையெல்லாம் தாண்டித்தான் சாய்ஸ்ரீயும் - தம்பி ஜீனத் பிரியனும் இன்றைக்கு இணைந்திருக்கிறார்கள். இதையெல்லாம் நான் ஏன் சொல்கிறேன் என்றால், எனக்கும் காதல் திருமணம்தான். அந்த அனுபவத்துடன்தான் பேசுகிறேன்.

மணமகளின் தந்தை சகோதரர் இராம.சரவணன் இன்றைக்கு ஐ.டி.விங்கில் மிகச்சிறப்பாக களப்பணியும், கழகப் பணியும் ஆற்றிக்கொண்டு இருக்கிறார். அதே போல, அவரின் துணைவியார் செல்வி இராமசரவணன் அவர்கள், மாவட்டக் கவுன்சிலராக சிறப்பாக மக்கள் பணியைச் செய்து வருகிறார்.

கழகப்பணி, மக்கள் பணி மட்டுமல்ல, இந்தக் குடும்பம் இன்றைக்கு மிகமிக முக்கியமான கல்விப் பணியிலும் சிறந்து விளங்குகிறது. அதற்கு எங்கள் வாழ்த்துகள். அண்ணன் இராமசரவணன் நடத்துகிற கல்வி நிறுவனங்களில் கிட்டத்தட்ட 2,000 மாணவர்கள் படிப்பதாகக் கேள்விப்பட்டேன். அவர்களின் இந்தக் கல்விப்பணி மென்மேலும் சிறக்க வேண்டும். பல்வேறு குழந்தைகளுக்கு, அவர்கள் கல்வியைத் தர வேண்டும்.

### திராவிட மாடல் அரசு

நம் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு 4 ஆண்டுகளைக் கடந்து சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த 4 ஆண்டுகளில் எண்ணற்றத் திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்குகாக கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். உதாரணத்திற்காக இரண்டு, மூன்று திட்டங்களை மட்டும் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மகளிர் விடியல் பயணம் திட்டம். நம் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பை ஏற்று போட்ட ஐந்து கையெழுத்துகளில் முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணம் திட்டம். இந்த நான்கு வருடங்களில் மட்டும் 750 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறீர்கள். சராசரியாக ஒவ்வொரு மகளிரும் ஒவ்வொரு மாதமும் 900 ரூபாயிலிருந்து, 1,000 ரூபாய் வரை இந்த திட்டத்தின் மூலம் மட்டும் சேமித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

கல்விக்காக தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டங்கள். அரசுப்பள்ளியில் படித்து, உயர்கல்வி படிக்கும் 8 லட்சம் மாணவ - மாணவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் நம் தலைவர் அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். மாணவர்கள் பள்ளிக்கல்வி மட்டும் படித்தால் போதாது, உயர்கல்வி படிக்க வேண்டும் என்பதற்காக, கல்வி ஊக்கத்தொகையை நம் தலைவர் அவர்கள் கொடுத்து இருக்கிறார்.

### 21 லட்சம் குழந்தைகள்

நேற்று காலை ஒரு திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு பெற்றோரும் மகிழ்ச்சியுடன் தன் பிள்ளைகளை, பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறார்கள். என் குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்கு நம் முதலமைச்சரும், நம் திராவிட மாடல் அரசும் இருக்கிறது என்று தைரியமாக அனுப்புகிறார்கள். பள்ளிக்கூடத்துக்கு சென்றவுடன் முதலில் தரமான காலை உணவு, அதன் பிறகு தரமான கல்வியைக் கொடுக்கிறது நம் அரசு என்று பெற்றோர்கள் எல்லாம் நம் முதலமைச்சரை வாழ்த்தி மகிழ்ச்சியுடன் அனுப்பி வைக்கிறார்கள். 21 லட்சம் குழந்தைகள் பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தில் பயன்பெற்று வருகிறார்கள்.

நேற்று முன்தினம் நம் முதலமைச்சர் அவர்கள், நகர்ப்புறங்களில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் இந்தத் திட்டத்தை விரிவாக்கம் செய்துள்ளார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு திட்டம். இந்தியாவில் இருக்கின்ற பல்வேறு மாநிலங்கள் எப்படியாவது நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஒவ்வொரு மாநிலத்தில் உள்ள முதலமைச்சர்களும் தமிழ்நாட்டிற்கு வந்து இதை எப்படிச் செயல்படுத்துகிறீர்கள் என்று பார்த்துவிட்டு, கேட்டுச் செல்கிறார்கள். கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். கிட்டத்தட்ட ஒரு கோடியே 18 இலட்சம் மகளிருக்கு, நம் முதலமைச்சர் அவர்கள் கடந்த 2 ஆண்டுகளாக மாதம் 1,000 ரூபாய் கொடுத்து இருக்கிறார்கள். இந்த இரண்டு வருடங்களில் 1 கோடியே 18 லட்சம் மகளிருக்கு 24 ரூபாயை இந்தத் திட்டத்தின் மூலம் கொடுத்து இருக்கிறார்.

### குழந்தைகளின் கல்விச் செலவு

முதலமைச்சர் அவர்கள் இன்னொரு சிறப்பான அறிவிப்பையும் வெளியிட்டு இருக்கிறார். சில இடங்களுக்கு இப்போது செல்லும் போது தாய்மார்கள் நன்றி தெரிவிக்கிறார்கள். அப்பாவிடம் சொல்லுப்பா, ஆயிரம் ரூபாய் மாதம் 15-ஆம் தேதி வங்கிக்கணக்கில் வந்து விடுகிறது. அதை எதற்குப் பயன்படுத்துகிறீர்கள் என்று கேட்பேன். என் மருத்துவச் செலவு, என் குழந்தைகளின் கல்விச் செலவு, அவசர உதவிக்குப் பயன்படுத்துகிறேன் என்றும் சொல்வார்கள்.

சில இடத்தில் தாய்மார்கள் நாங்கள் விண்ணப்பித்தோம் எங்களுக்கு வரவில்லை என்று சொன்னார்கள். அதை முதலமைச்சரிடம் தெரிவித்தேன். இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கான விண்ணப்பங்களும் வழங்கப்படுகின்றன. விரைவில் கூடுதல் எண்ணிக்கையிலான மகளிர் உரிமைத் தொகை வழங்க, நம் முதலமைச்சர் அவர்கள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பார்கள்.

நம்முடைய அரசின் பல்வேறு திட்டங்களால், இன்றைக்கு 11.20 சதவிகிதம் வளர்ச்சியுடன் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது என்று ஒன்றிய அரசின் புள்ளிவிவரங்களிலேயே தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே, இந்த திராவிட மாடல் அரசுக்கும், நம் முதலமைச்சருக்கும் நம் அத்தனை பேரும் முழுஆதரவைத் தர வேண்டும். இங்கு இருக்கின்ற அத்தனை பேரும் உங்களின் ஆதரவைக் கொடுப்பீர்கள். ஆனால், நான் உங்களிடம் கேட்பதெல்லாம் அடுத்த 6 மாதங்களில் சட்டமன்றத் தேர்தல் வர இருக்கிறது.

நாம் அனைவரும் ஒரு உறுதியை எடுத்துக்கொள்ள வேண்டும். அடுத்து, நம் முதலமைச்சர் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராக உட்கார வேண்டும் என்றால், நம் திராவிட முன்னேற்றக் கழகம் 7-வது முறையாக ஆட்சியில் அமர வேண்டும் என்றால், நீங்கள் அத்தனை பேரும், உற்றார் உறவினர்கள், நண்பர்கள், பக்கத்து வீட்டார்கள், தேர்தல் பிரச்சாரத்தை, அரசின் சாதனைகளை, முதலமைச்சரின் பணிகளை, திட்டங்களை மக்களிடம் எடுத்துச்சென்று சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

2026 சட்டமன்றத் தேர்தலில் சென்ற முறை பெற்ற வெற்றியைவிட, மிகப்பெரிய வெற்றியை நாம் பெற்றாக வேண்டும். தலைவர் அவர்கள் 200 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்று இலக்கு கொடுத்து இருக்கிறார்.

நாம் அனைவரும் களத்தில் இறங்கி, முழுமையாகப் பணியாற்றினால், 200 இல்லை 200-க்கும் அதிகமான தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறும். அதற்கு நாம் அத்தனை பேரும் இந்தத் திருமண நிகழ்வில் உறுதியேற்போம்.

### நிறைய சவால்கள்

இந்த நேரத்தில் மணமக்களுக்கு ஒரு வேண்டுகோள். இதன் பிறகுதான் உங்களுக்கு நிறைய சவால்கள் வரும். ஓரிரண்டு மாதங்கள் சுலபமாக சென்றுவிடும் அதற்கு பிறகு ஏதாவதொரு பிரச்சினையை யாராவது கிளப்புவதற்கு முயற்சிப்பார்கள். ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, கணவன் மனைவியாக மட்டுமல்லாமல், நல்ல நண்பர்களாக இரண்டு பேரும் தந்தை பெரியார் நமக்கு சொல்லிக் கொடுத்த சுயமரியாதையோடு வாழ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.


எந்த முடிவு எடுத்தாலும், அதில் இரண்டு பேரும் கலந்துபேசி அந்த முடிவில் உறுதியோடு இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முக்கியமாக தலைவர் அவர்கள் எல்லா திருமண விழாவிலும் வைக்கின்ற ஒரு வேண்டுகோள்தான். உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தைக்கு, ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி அழகான தமிழ்ப்பெயரை வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மணமக்கள் இருவரும் கழகமும் - கலைஞரும் போல, கழகத்தலைவரும் - உழைப்பும் போல வாழ்க, வாழ்க என வாழ்த்தி இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசினார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஜப்பானில் வருகின்ற 3.9.2025 முதல் 7.9.2025 வரை நடைபெறவுள்ள ஆசியா – ஓசியானிக் அல்டிமேட் விளையாட்டு போட்டியில் கலந்து கொள்ளவுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 விளையாட்டு வீரர்களுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியின்கீழ் மொத்தம் 9 இலட்சம் ரூபாய்க்கான உதவித் தொகை காசோலையினை நேற்று முன்தினம் (28.8.2025) வழங்கி, வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை WTT Feeder Vientiane –2025 டேபிள் டென்னிஸ் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த சர்வதேச டேபிள் டென்னிஸ் வீரர் ஞா.சத்தியன் நேற்று முன்தினம் (28.8.2025) சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடுவிளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.




## தி.மு.க. இளைஞர் அணி

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 2–இல் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதியிலும், மண்டலம் 9–இல் திருமங்கலம், கன்னியாகுமரி, குளச்சல் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளிலும் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 31.08.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | பூவிருந்தவல்லி | எம்.கே.என்.பேலஸ், சென்னை–திருவள்ளூர் சாலை, வேப்பம்பட்டு. |
| 05.09.2025 வெள்ளிக்கிழமை | காலை 10.00 மணி | திருமங்கலம் | கொடி மஹால், திருமங்கலம், மதுரை. |
| 06.09.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | கன்னியாகுமரி | ஐ.எம்.ஏ.மஹால் ஆசிரமம், சுசீந்திரம். |
| | மாலை 4.00 மணி | குளச்சல் | பிஸ்மி ஆடிட்டோரியம், பள்ளிவாசல் சாலை, குளச்சல். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 28-08-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி